செய்தி வெளியீடு எண்: 206 நாள்: 01.03.2011

## அரவாணிகள் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்ட ஏப்ரல் 15 ஆம் நாள் "திருநங்கையர் தினம்'' எனக் கடைப்பிடிக்கப்படும்! முதலமைச்சர் கலைஞர் ஆணை

தமிழகத்திலுள்ள அரவாணிகளுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பை அளிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்துச் சிறப்பான முறையில் செயல்படுத்தவதற்காக "அரவாணிகள் நல வாரியம்'' முதலமைச்சர் கலைஞர் அவர்களால், 15–4–2008 அன்று ஏற்படுத்தப்பட்டது.

அரவாணிகளைச் சிறப்பிக்கும் வகையில், இந்த ஆணை வெளியிடப்பட்ட ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாளை "திருநங்கையர் தினம்'' என அறிவிக்க வேண்டுமென தமிழ்நாடு அரவாணிகள் சங்கம் அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. அக்கோரிக்கையினை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, ஆண்டுதோறும் **ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் "திருநங்கையர் தினம்''** ஆகக் கடைப்பிடிக்கப்படுமென முதலமைச்சர் கலைஞர் இன்று (1–3–2011) ஆணையிட்டுள்ளார்.

---

வெளியீடு: –
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.